**பொ.து.ந.க.எண்.ஈ1/50545/2007**
**ஆணையர் அவர்களின் 16.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :360/2009 பொருள் எண்.14

**பணிவரன்முறைப்படுத்தல்**

அரசு ஆணை (ப) எண்.389, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 28.08.2009ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தகுதிவாய்ந்த, கீழ்காணும் 5 இளநிலை பொறியாளர் (மின்சாரம்)களுக்கு உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கியதற்கு, தனியர்கள் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் அரசு உறுதியாக்கம் செய்து ஆணை வழங்கியுள்ளது.

| வ.எண். | பெயர் | பணியில் சேர்ந்த நாள் | அரசின் உறுதியாக்கம் செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1. | திரு. எம். புருஷோத்தமன், | 24.02.2009 | 24.02.2009 |
| 2. | திரு. எம். கருப்பையா, | 24.02.2009 | 24.02.2009 |
| 3. | திரு. வி. குமரவேல், | 24.02.2009 | 24.02.2009 |
| 4. | திரு. எஸ். பாலகிருஷ்ணன், | 24.02.2009 | 24.02.2009 |
| 5. | திரு. என். திருநாவுக்கரசு | 24.02.2009 | 24.02.2009 |

மேற்சொன்ன ஐவருக்கும், பதவி உயர்வு பெற்ற பதவியான உதவி கோட்ட மின் பொறியாளர் பதவியில் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்ட நிலையில், தனியர்களின் பணியை அப்பதவியில் பணிவரன்முறைப்படுத்துவது அவசியமாகிறது. சென்னை மாநகராட்சி பொறியாளர்களின் பணிவிதிபடி, உதவி கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு–IIன் கீழ் வருவதால், பணிவரன்முறை செய்ய மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனவே, உதவி கோட்ட மின் பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்ற மேற்சொன்ன ஐந்து பொறியாளர்களுக்கும் அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டுள்ள நிலையில், அப்பதவியில் தனியர்கள் பணியில் சேர்ந்த நாளான 24.02.2009 முதல் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>வ.து.ந.க.எண்.அ1/8148/2009</u>
<u>ஆணையர் அவர்களின் 23.09.2009 நாளிட்ட குறிப்பு</u>

**<u>29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :361/2009 பொருள் எண்.15

<u>பணிவரன்முறை</u>

திருவாளர்கள் ஜெ. முரளிதர் மற்றும் கே. மதனகோபால், வரிமதிப்பீட்டாளர்கள் தற்காலிகமாக, அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.8000–275–13500 (15600–39000 + தர ஊதியம் 5400) என்ற ஊதிய விகிதத்தில் உதவி வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கி செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/18130/2008, நாள் 20.01.2009–ன்படி ஆணை வழங்கப்பட்டது.

இப்பணி நியமனத்திற்கு அரசாணை எண்.(ப) 357 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 11.08.2009ல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து திருவாளர்கள் ஜெ. முரளிதர் மற்றும் கே. மதனகோபால் ஆகியோரின் பணிகள் உதவி வருவாய் அலுவலர் பதவியில் அவரவர் பணியில் சேர்ந்த நாளான 21.01.2009 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>க.து.ந.க.எண்.இ1/1591/2009</u>
<u>ஆணையாளர் அவர்களின் 12.10.2009 நாளிட்ட குறிப்பு</u>

<u>29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :362/2009 பொருள் எண்.16

<u>தேர்வுநிலை ஊதிய நிர்ணயம்</u>

கட்டட துறையில் செயற்பொறியாளராக பணியாற்றும் திரு. ஜி.ஜி. ராஜேந்திரன், அவர்கள் 22.07.2009 நாளிட்ட விண்ணப்பத்தில் உதவி செயற்பொறியாளர் பதவியில் பத்தாண்டுகள் பூர்த்தியானதால் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்யும்படி கோரியுள்ளார்.

திரு. ஜி.ஜி. ராஜேந்திரன், அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக பணியமர்த்தப்பட்டு 29.01.1980 அன்று பணியில் சேர்ந்துள்ளார். இப்பதவியில் 29.01.1980 முதல் பணிவரன் முறை செய்து 28.01.1982 முதல் தகுதிகாண் பருவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உதவி பொறியாளர் பதவியில் பத்தாண்டுகள் பூர்த்தியானதால் 29.01.1990 முதல் உதவி பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பின்னர் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 29.11.1993 அன்று பணியில் சேர்ந்துள்ளார். உதவி செயற்பொறியாளர் பதவியில் 29.11.1993 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது. தற்போது உதவி செயற்பொறியாளர் பதவியிலேயே ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. உதவி செயற்பொறியாளர் பதவியில் 28.11.2003 அன்று பத்தாண்டுகள் பூர்த்தி அடைந்துள்ளதால் 29.11.2003 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கையோ, விசாரணையோ நிலுவையில் இல்லை. மேலும் தனியர் உதவி செயற்பொறியாளருக்கான முழு தகுதியும் பெற்றுள்ளார். எனவே, தனியருக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வு நிலை ஊதியம் வழங்கலாம் என கருதப்படுகிறது. தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணிப்பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருவதால், தனியருக்கு தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

தனியர் உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதமான ரூ.8000–275–13500ல் 29.11.2003 அன்று அடிப்படை ஊதியம் ரூ.10475/– பெற்று வந்துள்ளார். தனியர் உதவி செயற்பொறியாளர் பதவியில் 28.11.2003 அன்று 10 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளதால் 29.11.2003 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் புக அனுமதித்து, ரூ.9100–275–14050 எனும் காலச் சம்பள ஏற்ற முறையில் அடிப்படை ஊதியம் ரூ.10475/–ல் ஒரு ஊதிய உயர்வு அளித்து ரூ.10750/– என ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.

எனவே, திரு. ஜி.ஜி. ராஜேந்திரன், செயற்பொறியாளர், கட்டடதுறை அவர்களை உதவி செயற்பொறியாளர் பதவியின் சாதாரண நிலை ஊதிய விகிதமான ரூ.8000–275–13500லிருந்து தேர்வு நிலை ஊதிய விகிதமான ரூ.9100–275–14050ல் 29.11.2003 முதல் புக அனுமதித்து ரூ.10750/– என அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:க.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.6.ந.க.எண்.சுது/எச்1/377/2009**
**ஆணையர் அவர்களின் 22.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :363/2009 பொருள் எண்.17

**தேர்வுநிலை ஊதியம் நிர்ணயம்**

மருத்துவர் திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.சி1/2006/97, நாள் 27.02.1999ன்படி மருத்துவ அலுவலராக 12.03.1999 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

அன்னாரது பணி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/2006/97, நாள் 16.04.2001—ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டும், 12.03.2001 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்—6 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | பணிவரன்முறை படுத்தப்பட்ட நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர் | 12.03.1999 | 12.03.1999 | ஏதுமில்லை |

| 10 ஆண்டுகால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வுநிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 11.03.2009 | ஏதுமில்லை | -- | 12.03.2009 |

மருத்துவர் திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்—6 அவர்கள் 12.03.2009 அன்று மருத்துவ அலுவலர் பதவியில் சாதாரண நிலையின் ஊதிய விகிதமான Pay Band-3 15600-39100ல் அடிப்படை ஊதியம் ரூ.26,310/— பெற்று வருகிறார்.

கணக்கு அலுவலர், மண்டலம்—6 அவர்களின் 03.09.2009 நாளிட்ட குறிப்புரையில், திரு.ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர் அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு, 12.03.2009 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதித்து, ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டு, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான Pay Band-3 15600-39100ல் 12.03.2009 முதல் அடிப்படை ஊதியம் ரூ.27,100/— என ஊதியம் நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவர் திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்—6 அவர்கள் பத்தாண்டுகள் பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு தேர்வு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

மருத்துவ அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு—2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு சிறப்பு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் 03.09.1982—ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திரு. ஆர். வீரசோழன், மருத்துவ அலுவலர், அவர்களுக்கு மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு 12.03.2009 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதித்து, ஒரு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டு, அவரது ஊதியத்தை மருத்துவ அலுவலர் பதவியின் ஊதிய விகிதமான Pay Band-3 15600-39100ல் 12.03.2009 முதல் அடிப்படை ஊதியம் ரூ.27,100/—ல் ஊதியம் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந. (ம) ம.கு.ந.க. எண். எப் 4 / 2032 / 2009**
**ஆணையர் அவர்களின் 09.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :364/2009 பொருள் எண்.18

**சிறப்பு நிலை ஊதிய நிர்ணயம்**

டாக்டர். திருமதி. வி. பூங்கோதை, மருத்துவ அலுவலர், சைதாப்பேட்டை, மண்டலம் மருத்துவ அலுவலராக 16.05.1986ல் சென்னை மாநகராட்சியில், மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியமர்த்தப்பட்டார். இவரது பணியை அரசாணை (ப) எண்.1279 F&FW நாள் 25.09.1991ன்படி 16.05.1986 முதல் பணி வரன்முறைபடுத்தியும், 23.05.1988 முதல் தகுதி காண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.1251/92 நாள் 17.07.1992ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் 29.07.1992 நாளிட்ட செயல்முறை ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி. வி. பூங்கோதை, மருத்துவ அலுவலர், சைதாப்பேட்டை மண்டலம் அவர்கள் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவுமில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதம் திருத்திய சம்பள ஊதிய குழுவின் கணக்கின்படி ரூ.10000–325–15200–ல் ரூ.11950 + 175PP + 300 சிறப்பு ஊதியம் 16.05.2006 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணி வரன் முறை நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | ஊதிய மில்லா விடுப்பு நாட்கள் | தேர்வு நிலை வழங்கிய நாள் | 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டுகளில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்பு நிலை வழங்க வேண்டிய நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| டாக்டர் திருமதி. வி.பூங்கோதை மருத்துவ அலுவலர் | 16.05.86 | 23.05.88 | ஏதுமில்லை | 16.05.96 | 15.05.06 A.N. | ஏதுமில்லை | ஆம் | 16.05.06 |

டாக்டர். திருமதி. வி. பூங்கோதை, மருத்துவ அலுவலர், சைதாப்பேட்டை மண்டலம், அவர்களுக்கு சிறப்புநிலை காலமுறை சம்பளம் வழங்கவும், மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 15.05.2006–ல் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.11950 + 175PP +300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.10000–325–15200–ல் 16.05.2006 முதல் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.7.ந.க.எண்.எச்1/032/2008**
**ஆணையர் அவர்களின் 14.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :365/2009 பொருள் எண்.19

**கணக்கு தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

டாக்டர். டி. பிரபாகர் அவர்கள் 06.03.1985 அன்று ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் சு.து.ந.க.எண்.சி1/19070/1984, நாள் 20.02.1985–ன்படி சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இதனை தொடர்ந்து அவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 06.03.1985 முதல் பணிவரன்முறைப்படுத்தி 06.03.1987 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டார்.

மேற்கண்ட மருத்துவ அலுவலர் அவர்களின் பிறந்த தேதி 21.06.1948. எனவே, தனியர் 30.06.2006 அன்று வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் 13.08.2007 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட அலுவலர் தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாததற்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, டாக்டர் திரு. டி. பிரபாகர், மருத்துவர், சுகாதார பிரிவு, மண்டலம்–7, வயது முதிர்வு ஓய்வு நாள் 30.06.2006 அவர்கள் கணக்கு தேர்வு தேர்ச்சி பெறாததற்கு அரசின் தளர்வாணை பெறுவதற்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பே.சா.து.ந.க.எண்.பி5/2275/2008**
**ஆணையர் அவர்களின் 10.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :366/2009 பொருள் எண்.20

**கடவுச்சீட்டு பெற தடையின்மை சான்று**

சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, உதவி செயற் பொறியாளர், திரு.ஜி.தமிழ்செல்வன் அவர்கள் 27.06.2008 நாளிட்ட கடிதத்தில் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களை பார்க்க மலேசியாவிற்கு 25–12–2009 முதல் 08–01–2010 வரை 15 நாட்களில் சென்று வர கடவு சீட்டு (Passport) பெறுவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கும்படி கோரியுள்ளார். மேலும், மலேசியா சென்று வர ஆகும் செலவு ரூ.1,50,000/–ஐ சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திலிருந்து கடன் பெற்று சென்று வரப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு.ஜி.தமிழ்செல்வன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் உதவி பொறியாளராக 30.06.1993 முதல் பணியில் சேர்ந்தார். பிறகு 18.5.2007 முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, இந்நாள் வரை தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர் இதுவரை 15 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளார். இவர் 31.01.2025 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். சென்னை மாநகராட்சி, துணை ஆணையர் (பொ.நி.ம.ப) செயல்முறை ஆணை எண்.பொ.து.ந.க.எண்.ஈ8/23794/95 நாள்.21.11.1995–ன் படி உதவி பொறியாளர் பதவியில் 30.06.1993 முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சி, உதவி ஆணையர் (மண்டலம்–7) செயல்முறை ஆணை எண். ம.அ.7.ந.க.எண்.அ1/9346/06 நாள். 15.12.2006–ன் படி இப்பதவியில் 30.06.1995 முதல் தகுதி காண் பருவம் முடித்தமைக்காக ஆணை வழங்கப்பட்டது.

ஆகையால், தனியருக்கு கடவுசீட்டு (Passport) பெறுவதற்கு தடையில்லா சான்றிகழ் வழங்குவதற்காக இவர் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணைகள் நிலுவையில் உள்ளதா என சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலரிடம் கோரப்பட்டது. விழிப்பு அலுவலரின் 22.07.2008 நாளிட்ட குறிப்பில் தனியர் மீது விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், தனியர் மீது குற்றச்சாட்டுகள், வழக்குகள் மற்றும் விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என காவல்துறை கண்காணிப்பாளர், சி.ஐ.டி. பாதுகாப்பு பிரிவு அவர்களிடம் கருத்துரை கோரப்பட்டது. சி.ஐ.டி. பாதுகாப்பு பிரிவு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் தங்கள் அலுவலக ஏடுகளில் திரு.ஜி.தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, சென்னை மாநகராட்சி அவர்கள் மீது எந்தவிதமான எதிரிடை குறிப்புகள் (Nothing adverse) இல்லை என்றும் தனியருக்கு வெளிநாடு சென்றுவர தடையில்லா சான்றிதழ் வழங்க பாதுகாப்பு குறிப்பீடு சம்பந்தமாக ஏதும் தடையில்லை என கடிதம் எஸ்.சி.ஏ.4.எண்.1998/ஊ, நாள்.21.07.08–ன் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும், தனியர் மீது குற்றச்சாட்டுகள் மற்றும் விசாரணைகள் ஏதேனும் நிலுவையில் உள்ளதா என விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குனரிடம் இவ்வலுவலக 02.07.2008 நாளிட்ட கடிதம் மூலம் கருத்துரை கோரப்பட்டது. விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அவர்கள் திரு.ஜி.தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை சென்னை மாநகராட்சி அவர்கள் மீது விசாரணையோ அல்லது புலன் விசாரணையோ நிலுவையில் இல்லை என கடிதம் எண்.24482/விஎசி–24/2008 நாள்.22.08.2008–ன் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையில் திரு.ஜி.தமிழ்செல்வன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது இந்நாள் வரையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் மற்றும் விசாரணைகளும் நிலுவையில் இல்லை.

ஆகையால், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, உதவி செயற்பொறியாளர் திரு.ஜி.தமிழ்செல்வன், அவர்கள் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களை பார்க்க மலேசியாவிற்கு 25–12–2009 முதல் 08–01–2010 வரை 15 நாட்களில் சென்று வர கடவுசீட்டு பெற கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கு நியமனக் குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பே.சா.து.ந.க.எண்.பி5/2275/2008**

(1) ஆணையரின் முன் அனுமதி இன்றி தனியர் வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது அந்நாட்டில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொள்வதோ, பயிற்சியில் கலந்து கொள்வதோ மற்றும் மேற்படிப்பு மேற்கொள்ளவோ கூடாது.

(2) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் வியாபார சம்பந்தமாக ஆதரவு திரட்டுவதோ மற்றும் அது சம்பந்தமாக பணிபுரிவதோ கூடாது.

(3) தனியர் வெளிநாடு சென்று வருவதற்கான செலவினங்களை சென்னை மாநகராட்சி ஏற்காது.

(4) வெளிநாடு புறப்படுவதற்கு முன் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து தகுதிவாய்ந்த விடுப்புக்கான அனுமதி பெற வேண்டும் என்றும்; அவ்வாறு பெறும் விடுப்பு 6 மாதங்களுக்கு மிகையாகக் கூடாது.

(5) வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது தனியர் தான் சென்னை மாநகராட்சியில் வகித்துவரும் பதவியிலிருந்து விலகல் கடிதம் (Resignation letter) அளிக்கும் பட்சத்தில் அதனை ஏற்க இயலாது.

(6) தனியருக்கு இப்பயணத்திற்காக வழங்கிய தடையில்லா சான்றிதழின் பேரில் பெறப்பட்ட கடவுச் சீட்டினை அடுத்தடுத்த வெளிநாடு பயணங்களுக்கு ஆணையரின் முன்அனுமதி இன்றி பயன்படுத்தக்கூடாது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பே.சா.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.　　　　மன்றச் செயலாளர்

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :367/2009 பொருள் எண்.21

**வெளிநாடு செல்ல அனுமதித்தமைக்கு பின்னேற்பு**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை செனாய் நகர் மண்டலத்தில், மருத்துவ அலுவலராக பணி செய்து வரும் டாக்டர். திருமதி. டி. இளவேனில் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வசிக்கும் தன்னுடைய கணவரை காண்பதற்கு 01.09.09 முதல் 09.12.09 வரை 100 நாட்கள் ஈட்டிய விடுப்பும் மற்றும் 10.12.09 முதல் 27.02.2010 வரை சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பும் மற்றும் 28.02.2010 முதல் 26.08.2010 வரை சம்பளமில்லா விடுப்பில் செல்வதற்கு 29.07.09 நாளிட்ட கடிதத்தில் விண்ணபித்துள்ளார்.

டாக்டர். திருமதி. டி. இளவேனில் அவர்கள் மதுரை மாநகராட்சியில் 20.03.2000ல் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு ஒரு வழி மாறுதலாக சென்னை மாநகராட்சியில் 04.01.06 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறை படுத்தியும் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. தனியர் அவர்களின் கணக்கில் 87 நாட்கள் ஈட்டிய விடுப்பு உள்ளது. சென்னை மாநகராட்சி விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி. டி. இளவேனில், மருத்துவ அலுவலர் அவர்கள் தனது கடிதத்தில் தனது பயணச் செலவு முழுவதும் தனது கணவர் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

டாக்டர். திருமதி. டி. இளவேனில், மருத்துவ அலுவலர் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள கடவுச் சீட்டு பெறுவதற்கு மன்றத் தீர்மான எண். 442/08 நாள் 27.08.08 மூலமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவர் பதவி வகுப்பு 2 ன் கீழ் வருவதால் அயல்நாடு பயணத்திற்கு செல்ல மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் வெளிநாடு செல்வதற்கு அரசாணை எண். 259 பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 17.12.07 ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

**நிபந்தனைகள் பின்வருமாறு:—**

1. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலை வாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்து கொள்ளக்கூடாது.
2. வெளிநாடு செல்லும் பயணச்செலவு உட்பட எந்தவிதமான செலவுகளையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
3. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது சென்னை மாநகராட்சியின் பணியைத் துறக்க விண்ணப்பிக்கக்கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கை ஏற்கப்படமாட்டாது.
4. வெளிநாட்டில் தங்கும்போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
5. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
6. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டு பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக்கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து 6 மாதங்களுக்கு அவரால் தெரிவிக்கபட்டிருக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர். திருமதி. டி. இளவேனில், மருத்துவ அலுவலர் அவர்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு 01.09.09 முதல் 26.11.09 வரை 87 நாட்கள் ஈட்டிய விடுப்பும் மற்றும் 27.11.09 முதல் 25.01.2010 வரை 60 நாட்கள் சொந்த காரணங்களுக்கான ஈட்டா விடுப்பும் மீதமுள்ள 218 நாட்கள் வரை சம்பளமில்லா விடுப்பில் பயணம் மேற்கொள்ள மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**அ.அ.ந.க.எண்.அ1/1165/2008**
**ஆணையர் அவர்களின் 14.08.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :368/2009 பொருள் எண்.22

**பணியமைப்பு**

காவல்துறை ஆணையர் அவர்களின் ஆணைப்படி, திரு. எம். முனியாண்டி, தலைமைக் காவலர்/8566 என்பவர் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் அயற்பணியின் மூலம் மூன்றாண்டுகளுக்கு பணியாற்ற ஆணையிட்டதைத் தொடர்ந்து சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் தனியர் 01.10.2004 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி திரு. எம். முனியாண்டி, தலைமைக் காவலர்/8566, விழிப்பு குழுமம் என்பவர் சென்னை மெரினா நீச்சல் குளத்தில், எவ்வித உழைப்பூதியமின்றி வழக்கமான பணிகளுடன் பகுதி நேர நீச்சல் பயிற்சியாளராக பணிபுரியுமாறு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.484, உள் (காவல்–V), துறை நாள் 18.06.2009–ன்படி திரு. எம். முனியாண்டி, தலைமைக் காவலர்/8566, விழிப்புக் குழுமம், பகுதிநேர நீச்சல் பயிற்சியாளர், சென்னை மாநகராட்சி என்பவரை அயற்பணியில் சேர்ந்த நாள், அதாவது 01.10.2004 முதல் சென்னை மாநகராட்சியில் நிரந்தரமாக எடுத்துக் கொள்ள ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணையைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, சென்னை மாநகராட்சி அரங்க அலுவலர், அரங்கத்துறை கட்டுப்பாட்டில் இயங்கிவரும் சென்னை மெரினா நீச்சல் குளத்தில் திரு. எம். முனியாண்டி, தலைமைக் காவலர்/8566 என்பவரை நிரந்தர நீச்சல் பயிற்சியாளர் பதவியில் ரூ.4000–100–6000 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியமர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவைகளின் அடிப்படையில் திரு. எம். முனியாண்டி, தலைமைக் காவலர் / 8566 என்பவரை ரூ.4000–100–6000 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் நிரந்தர நீச்சல் பயிற்சியாளர் பதவியில் சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியமர்வு செய்யப்பட்டதற்கு, நியமனக் குழுவின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:அ.அ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்4/1143/2009**
**ஆணையர் அவர்களின் 16.09.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :369/2009 பொருள் எண்.23

**மண்டல அலுவலர் (குடும்ப நலம்) தெரிவு பட்டியல்**

அரசாணை எண். 79, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை 09.03.2000 ல் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின் மூலம் 10 மண்டல அலுவலர் பணியிடங்களை தொடர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மண்டல அலுவலர் பதவி வகுப்பு 2 ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85 (3) (பி) ன் படி இப் பதவியினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் பணிநியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான தெரிவு பட்டியல் தயாரிக்க மைய நாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆகும்.

2009 – 2010 ஆம் ஆண்டிற்கு மண்டல அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடத்தின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் (ம) பதவி | காலிப்பணியிடத்திற்கான காரணம் | காலிப்பணியிடம் ஏற்பட்ட / ஏற்படவுள்ள நாள் |
|---|---|---|---|
| 01 | டாக்டர். காஞ்சனமாலா, மண்டல அலுவலர் | வயது முதிர்வு ஓய்வு | 31.05.2008 |
| 02 | டாக்டர். எம். மணிமேகலை, மண்டல அலுவலர் | வயது முதிர்வு ஓய்வு | 31.07.2008 |
| 03 | டாக்டர். பி. சாருமதி, மண்டல அலுவலர் | மா.கு.ந.ம.அலுவலராக பதவி உயர்வு பெற்றார் | 05.08.2009 |
| 04 | டாக்டர். பானுமதி ஈஸ்வரன், மண்டல அலுவலர் | மா.கு.ந.ம.அலுவலராக பதவி உயர்வு பெற்றார் | 05.08.2009 |
| 05 | டாக்டர். கே. மனோகரி, மண்டல அலுவலர் | வயது முதிர்வு ஓய்வு பெற உள்ளார் | 31.12.2009 |

அரசாணை எண். 161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.08.98 ன் படி மண்டல அலுவலர் பதவிக்கான நியமன முறை பின்வருமாறு:–

| பதவியின் பெயர் | நியமன முறை | தகுதி |
|---|---|---|
| மண்டல அலுவலர் | மாவட்ட குடும்ப நலத் துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரிபவர்களை பதவி உயர்வின் மூலம் | (அ) மாவட்ட குடும்பநலத்துறையில் மருத்துவ அலுவலராக தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு குறையாது பணியாற்றி இருப்பவர்கள்<br>(ஆ) தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்புத் தேர்வில் தேர்ச்சி |
| | நேரடி நியமனம் | எம்.பி.பி.எஸ்., தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது பட்டைய படிப்பு<br>(ஆ) மாநில அரசின் கட்டுப் பாட்டில் உள்ள துறைகள், நிறுவனங்களில் பணிபுரிவர்கள் மூலம் |

மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி 01.04.2009 மைய நாளாக கொண்டு மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்பு 2007 ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. நிர்வாக காரணங்களினால் 2008 ஆம் ஆண்டில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் தயாரிக்கப்படவில்லை.

வரையறுக்கப்பட்டுள்ள பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவியினை பதவி உயர்வு மூலம் நிரப்ப ஊட்ட பதவியில் உள்ள பின்வரும் மருத்துவ அலுவலர்கள் பெயர் பணி மூப்பின் படி பரிசீலிக்கப்பட்டது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| 01 | டாக்டர். ரீட்டா மோரிஸ் | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி, மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதிகள் பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 02 | டாக்டர். சி.எம். பானுமதி | 28.08.09 அன்று தன் விருப்ப ஓய்வில் சென்றதால், இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 03 | டாக்டர். சந்திர பிரபா | 29.07.09 அன்று மண்டல அலுவலர் பதவி உயர்வு ஏற்க விருப்பம் இன்மை கடிதம் அளித்துள்ளார். எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 04 | டாக்டர். டி. இந்திரா | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 05 | டாக்டர். கே. சூரியகுமாரி | இவர் பணி நியமன ஆணை பெற்று பணியில் சேரவில்லை. எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 06 | டாக்டர். எம்.பி.எம். நாச்சியார் | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 07 | டாக்டர். நசரத் மொய்தீன் ஹபீபா | இவர் பணி நியமன ஆணை பெற்று பணியில் சேரவில்லை. எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 08 | டாக்டர். எஸ். ராஜேஸ்வரி | வயது முதிர்வு காரணமாக 31.03.09 அன்று ஓய்வு பெற்றார். எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 09 | டாக்டர். கே. காந்திமதி | வயது முதிர்வு காரணமாக 31.05.07 அன்று ஓய்வு பெற்றார். எனவே, இவரது பெயரை பரிசீலிக்க இயலாது. |
| 10 | டாக்டர். ஜெயபாலா | இவர் பணி நியமன ஆணை பெற்று பணியில் சேரவில்லை. எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 11 | டாக்டர். ஆர்.எஸ். லட்சுமி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 12 | டாக்டர். ஹேமலதா | இவர் பணி நியமன ஆணை பெற்று பணியில் சேரவில்லை. எனவே, இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 13 | டாக்டர். பி. ஞானவள்ளி | சென்னை மாநகராட்சி பணியினை துறப்பு செய்துள்ளதால் இவரது பெயரை பரிசீலிக்க தேவையில்லை. |
| 14 | டாக்டர். ஜே. முத்தொளி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |
| 15 | டாக்டர். டி.தரணி | வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி மண்டல அலுவலர் பதவிக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப் பட்டியலில் சேர்ப்பது குறித்து பரிசீலிக்கலாம். |

**மா.கு.ந.(ம) ம.கு.ந.க.எண்.எப்4/1143/2009**

வரிசை எண். 1 ல் உள்ள டாக்டர். ரீட்டா மோரிஸ் என்பவர் அடுத்து வரும் மைய நாளுக்குள் **31.12.2009** அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதால் பணிமூப்பின்படி அடுத்து வரும் நபரான வரிசை எண். 15 ல் டாக்டர். டி. தரணி என்பவரது பெயரினை மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

ஆகவே, 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான 01.04.2009 ஐ மையநாளகக் கொண்டு மாவட்ட குடும்ப நலத்துறையில் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர்கள் செல்வி/திருமதி |
|---|---|
| 01 | டாக்டர். ரீட்டா மோரிஸ் |
| 02 | டாக்டர். டி. இந்திரா |
| 03 | டாக்டர். எம்.எ.பி.எம். நாச்சியார் |
| 04 | டாக்டர். ஆர்.எஸ். லட்சுமி |
| 05 | டாக்டர். ஜே. முத்தொளி |
| 06. | டாக்டர்.டி.தரணி |

மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 6 மருத்துவ அலுவலர்கள் மீது துறை சம்மந்தமாக ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. கடந்த 5 ஆண்டுகளுக்கான மந்தன அறிக்கை மூலம் இவர்களின் பணி திருப்திகரமாக உள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

(1) பின்வரும் மண்டல அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டியம்,

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர்கள் செல்வி/திருமதி |
|---|---|
| 01 | டாக்டர். ரீட்டா மோரிஸ் |
| 02 | டாக்டர். டி. இந்திரா |
| 03 | டாக்டர். எம்.எ.பி.எம். நாச்சியார் |
| 04 | டாக்டர். ஆர்.எஸ். லட்சுமி |
| 05 | டாக்டர். ஜே. முத்தொளி |
| 06. | டாக்டர்.டி.தரணி |

2) மேற்படி தெரிவுப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 6 நபர்களை கொண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள / ஏற்படவுள்ள மண்டல அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடத்தினை அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ. 15600–39100 + Grade Pay 5700 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் இதர படிகளுடன் நியமனம் செய்யவும்.

" அரசு ஆணை (நிலை) எண்.181, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.06.10.2009ல் வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வளிப்பின்படி இதற்கு மன்றம் முழுமையான அதிகாரம் பெற்றுள்ளதால் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு அரசின் உறுதியாக்கம் பெறவேண்டியதில்லை என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**<u>29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :370/2009 பொருள் எண்.24

**<u>மருத்துவ அலுவலர் பணிநியமனம் பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி (அரசாணை எண். 161 ந.நி(ம)கு.வ.துறை நாள் 28.08.98) மருத்துவ அலுவலர் பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும். மருத்துவ அலுவலர் பதவிக்கு கல்வித் தகுதி, பல்கலைக் கழக மான்யக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட, மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் (MBBS.,) பட்டம், மேலும் மகப்பேற்றில் மேற்படிப்பு (அ) பட்டயம் விரும்பத்தக்கது ஆகும். இப்பதவிக்கு வயது வரம்பு 35 க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். இப்பணியின் காலமுறை ஊதிய விகிதம் ரூ. 8000–275–13500 ஆகும்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2 ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919, துணை விதி 85 (3) (b) ன் படி, அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு பணி நியமனம் செய்ய மன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

அரசாணை (ப) எண். 459 MAWS நாள் 30.10.08 ன் படி 8 மருத்துவ அலுவலர்கள் மண்டல அலுவலர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். 2 மருத்துவ அலுவலர் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற்றுள்ளனர். டாக்டர். ஸ்ரீ தேவி அவர்கள் 03.11.08 முதல் பணி துறப்பு செய்துள்ளார். ஆக மொத்தம் 11 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடம் நிரப்ப சென்னை மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் இன சுழற்சி முறையில் கீழ் கண்டுள்ளவாறு பெண் மருத்துவ அலுவலர்களை நியமனம் செய்ய பட்டியல் கோரப்பட்டது.

ஆணையர் அவர்களின் ஆணைக்கிணங்க வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலிலுள்ள மருத்துவ அலுவலர்களுக்கு 22.01.09 அன்று நேர்காணலுக்காக Phonogram மூலம் தகவல் அளிக்கப்பட்டு 06.02.09 அன்று காலை நேர்காணலில் கலந்து கொண்டவர்கள், தேர்வு செய்யப்பட்டவர்கள், காத்திருப்போர் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | இனம் | முன்னுரிமை | காலி இடம் | பட்டியலில் உள்ளவர்கள் | நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டவர்கள் | தேர்வு செய்யப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | தாழ்த்தப்பட்டடோர் | Priority | 01 | 01 | --- | |
| | | Non Priority | 01 | 05 | 03 | 01 |
| 02 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | Priority | - - - | | | |
| | | Non Priority | 02 | 10 | 04 | 02 |
| 03 | பிற்படுத்தப்பட்டோர் | Priority | - - - | | | |
| | | Non Priority | 03 | 15 | 04 | 03 |
| 04 | பொதுப்பிரிவு | Priority | 02 | 03 | - - - | |
| | | Non Priority | 02 | 10 | 05 | 02 |
| | Total | | 11 | 44 | 16 | 08 |

நேர்காணலில் முன்னுரிமை Priority (SC1,GT2) 3 பணியிடங்களுக்கு 4 பேர்களை நேர்காணலுக்கு அழைக்கப்பட்டது. ஆனால், ஒருவரும் நேர்காணலுக்கு வரவில்லை.

முன்னுரிமை இல்லாத 8 பணியிடங்களுக்கு 40 நபர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டு 16 பேர்கள் மட்டும் நேர்காணலுக்கு வந்து கலந்து கொண்டார்கள்.

**மா.கு.ந. (ம) ம.கு.ந.க. எண். எப் 4 / 4643 / 2008**

**06.02.09** அன்று நேர்காணலில் கலந்து கொண்டவர்கள் பற்றிய விவரம்:–

| வ. எண். | பெயர் டாக்டர் திருமதி/செல்வி | வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண்/தேதி | இனம் | கல்வித் தகுதி | தாய் மொழி | வயது | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | U. சிவகாமி | 1986 FO 4833 04.11.86 | SC | MBBS., | தமிழ் | 50 | |
| 02 | கே. குணமதி | 2005 F 13650 19.08.05 | SC | MBBS., | தமிழ் | 49 | |
| 03 | சி. பிரியரூபா | 2005 F 24416 29.12.05 | SC | MBBS., | தமிழ் | 28 | |
| 04 | ஜே. தேவலட்சமி | 2001 F 13740 20.09.01 | MBC | MBBS., | தமிழ் | 40 | |
| 05 | இ.மோகனலட்சுமி | 2007 F 21405 05.07.07 | MBC | MBBS., | தமிழ் | 30 | |
| 06 | கே.சுகந்தி | 2007 F 29156 11.09.07 | MBC | MBBS., | தமிழ் | 25 | |
| 07 | கே.சசிகலா | 2007 F 37958 02.11.07 | MBC | MBBS., | தமிழ் | 32 | |
| 08 | ஆர்.உஷாதேவி | 2005 F 3396 10.03.05 | BC | MBBS., | தமிழ் | 34 | |
| 09 | கே.சிவசங்கரி | 2005 F0 5374 26.04.05 | BC | MBBS., | தமிழ் | 26 | |
| 10 | எம்.கங்கா | 2006 FO 7197 15.05.06 | BC | MBBS., | தமிழ் | 34 | |
| 11 | டி.வசந்தகல்யாணி | 2006 FO 7549 17.05.06 | BC | MBBS., | தமிழ் | 25 | |
| 12 | எம்.நர்மதா | 2005 F 24620 30.12.05 | GT,SC | MBBS., DGO | தமிழ் | 26 | |
| 13 | டி.ஹேமலதா | 2006 FO 0418 05.01.06 | GT,SC | MBBS., | தமிழ் | 27 | |
| 14 | ஜெசிமா ஐதர் அலி | 2006 FO 1053 18.01.06 | GT,BC | MBBS., | தமிழ் | 35 | |
| 15 | வி.கே.மாலதி | 2006 FO 1903 31.01.06 | GT,SC | MBBS., | தமிழ் | 28 | |
| 16 | எஸ்.தீபா ரேஷ்மி | 2006 FO 2131 31.01.06 | GT,SC | MBBS., | தமிழ் | 33 | |

**06.02.2009** அன்று நடைபெற்ற பெண் மருத்துவ அலுவலருக்கான நேர்காணலில் கலந்து கொண்ட **16** மருத்துவ அலுவலர்களில் இனம் வாரியாக தேர்வு செய்யப்பட வேண்டியவர்கள்.

| வ.எண் | இனம் | N.P. |
|---|---|---|
| 01 | SC | 01 |
| 02 | MBC | 02 |
| 03 | BC | 03 |
| 04 | GT | 02 |
| | TOTAL | 08 |

**06.02.2009** அன்று நடைபெற்ற N.P. நேர்முக தேர்வில் இன சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் விவரம்.

| வ. எண். | பெயர் டாக்டர் திருமதி/செல்வி | வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண்/தேதி | இனம் | கல்வித் தகுதி | தாய் மொழி | வயது | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | U. சிவகாமி | 1986 FO 4833 04.11.86 | SC | MBBS., | தமிழ் | 50 | |
| 02 | ஜே. தேவலட்சமி | 2001 F 13740 20.09.01 | MBC | MBBS., | தமிழ் | 40 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 03 | ஆர்.உஷாதேவி | 2005 F 3396<br>10.03.05 | BC | MBBS., | தமிழ் | 34 | |
| 04 | எம்.நர்மதா | 2005 F 24620<br>30.12.05 | SC/G.T | MBBS.,<br>DGO | தமிழ் | 26 | |
| 05 | இ. மோகனலட்சுமி | 2007 F 21405<br>05.07.07 | MBC | MBBS., | தமிழ் | 30 | |
| 06 | கே.சிவசங்கரி | 2005 F0 5374<br>26.04.05 | BC | MBBS., | தமிழ் | 26 | |
| 07 | ஜெசிமா ஐதர் அலி | 2006 F01053<br>18.01.06 | BC/G.T | MBBS.,<br>DGO | தமிழ் | 35 | |
| 08 | எம்.கங்கா | 2006 FO 7197<br>15.05.06 | BC | MBBS., | தமிழ் | 34 | |

மேலே குறிப்பிடப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் பணியில் சேரவேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேற்படி தேர்வு பட்டியலில் வரிசை எண். 1 ல் உள்ள Dr. U. சிவகாமி மற்றும் வரிசை எண்–2ல் உள்ள டாக்டர் ஜே. தேவலட்சுமி ஆகியோர் வரையறுக்கப்பட்ட பணி விதிகளின் படி 35 வயது கடந்துள்ள போதிலும், அரசாணை எண்.98 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை, நாள் 17.7.06ன் படியும் தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலைப் பணியாளர் பொது விதி 12 (d)(ii) ன் படி இவர்களுக்கு வயது வரம்பு பொருந்தாது. எனினும் வயது தளர்வாணை அரசிடமிருந்து பெற்று பணி நிரந்தரம் செய்யலாம்.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள 11 மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் மேற்படி தேர்வு செய்யப்பட்ட 8 நபர்களுக்கு அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு, தற்காலிக மருத்துவ அலுவலராக ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் இதர படிகளுடன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனைகளுடன், 8 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கியதற்கும் இந்த 8 நபர்களில் யாராவது பணியில் சேரவில்லை எனில் அந்தந்த இனத்தின் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நியமனம் செய்வதற்கும், மேலும் மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு, தற்காலிமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பபட்டு மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்ததற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" அரசு ஆணை (நிலை) எண்.181, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.06.10.2009ல் வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வளிப்பின்படி இதற்கு மன்றம் முழுமையான அதிகாரம் பெற்றுள்ளதால் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு அரசின் உறுதியாக்கம் பெறவேண்டியதில்லை என்ற திருத்தத்துடன் இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஜி2/25101/2009**
**ஆணையாளர் அவர்களின் 13.10.2009 நாளிட்ட குறிப்பு**

**29.10.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :371/2009 பொருள் எண்.25

**அதிகாரப் பகிர்ந்தளிப்பு**

மன்றத்தீர்மானம் எண்.345/09, நாள் 30.09.2009ன்படி இணைப்பில் கண்டுள்ள அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 06.10.2009ல் சென்னை மாநகராட்சி மன்றம் / ஆணையர் அவர்களுக்கு அதிகார பகிர்வளித்து ஆணை வெளியிட்டுள்ளது. இவ்வரசாணையை நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பதிவிற்கும் தகவலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்